1972 மார்ச் 27]

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பல்லடம் தாலூகா, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் கரைப்புதூர் கிராமம் நில அளவை எண். 214-ல் சின்னக்கரை என்ற ஓடையின் குறுக்கே திருப்பூர்-பல்லடம் ரோடுக்கு மேல்புரத்தில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் பாசன தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

சிவன்மலைக் கவுண்டன் பாளையத்துக்குப் பாசனக்குளம்

*727 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முத்தனம்பாளையம் கிராமம் சிவன்மலைக் கவுண்டன் பாளையத்தில் ஒரு குளம் (Irrigation Tank) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பல்லடம் பகுதியில் உள்ள வறட்சிப் பகுதிகள்

*728 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் பகுதி வறட்சி பகுதியாக இருப்பதால் அப்பகுதியில் உள்ள குட்டைகளுக்கு P.A.P. வாய்க்காலிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து நிரப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்ப ாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.